# தடம் THADAM


யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி 2012

J/CHAVAKACHCHERI HINDU COLLEGE CHAVAKACHCHERI *January - April* **VOLUME 5 ISSUE 1**


## நிறுவுநர் நாள் - 2012




எமது கல்லூரியின் நிறுவுநர் அமரர் திரு வி.தாமோதரம்பிள்ளை அவர்களை நினைவு கூருமுகமாகக் கல்லூரி நிறுவுநர் தினம் 05.02.2012 ஞாயிற்றுக் காலை எமது கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. எமது கல்லூரியின் இவ் வருடத்திற்கான முதல் நிகழ்வும், முக்கியமான நிகழ்வும் இதுவாகும்.



முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் அழைக்கப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.கு.பிறேமகாந்தன் அவரகள் கலந்து சிறப்பித்தார். பேராசிரியர் செ.புஸ்பரட்ணம் (தலைவர், வரலாற்றுத் துறை, யாழ். பல்கலைக்கழம்) அவர்கள் நிறுவுநர் நினைவுப் பேருரையை நிகழ்த்திச் சிறப்பித்தார். வழமை போல இவ்வருடம் கல்லூரிச் சஞ்சிகை தாமோதரன் வெளியீட்டு நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றது. சஞ்சிகை வெளியீட் டுரையை நிகழ்த்துவதற்காக திரு க.அருந்தாகரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) அவர்கள் வருகை தந்திருந்தார்.



பிரதி அதிபர் திரு ந.பாலச்சந்திரன் அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்வு ஆரம்பமானது கல்லூரி முதல்வர் அவர்கள் தமது தலைமையுரையிலே நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்த துடன் அவரது அயராத முயற்சியும் தர்ம சிந்தையுமே இன்றைய எமது கல்லூரியின் தோற்றத்திற்கு வித்தாய் அமைந்தன என்றார். மேலும் இன்று பெருவிருட்சமாய் கிளைகள் பல பரப்பி எத்தனையோ உள்ளங்களில் ஞான ஒளியேற்றும் நிறுவனமாக எமது கல்லூரி திகழ்வதற்கு காரணகர்த்தாவாய் அமைந்தவர் அமரர் திரு.வி.தாமோதரம்பிள்ளை அவர்கள் என்று குறிப்பிட்டார்.

தென்மராட்சியின் “தொன்மையும் பெருமையும் - தொல்லியல் வரலாற்று நோக்கு” என்ற தலைப்பி



லான நிறுவுநர் நினைவுப் பேருரையை பேராசிரியர் செ.புஸ்பரணம் அவர்கள் நிகழ்த்தினார். தென்மராட்சியின தொன்மையும் பெருமையும் தென்மராட்சியின் பூர்வீக மக்கள், அயல் நாட்டுத் தொடர்புகள், தென்மராட்சியின் புராதன இந்து ஆலயங்கள், சாவகச்சேரியில் யாழ்ப்பாண இராசதானி ஆலய வழிபாடுகள், போர்த்துக்கேயரின் கலையழிவுக் கொள்கை போன்ற விடயங்கள் தொடர்பாக அமைந்த நினைவுப் பேருரையானது காலத்தின் தேவைகருதிய எமது பிரதேசத்தின் தொன்மை வரலாற்றை ஆதாரங்களோடு நிருபிப்பதாக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.



சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் உரையாற்றும் போது மாணவர்களின் எண்ணங்களின் வெளிப்பாடாக மலர்ந்துள்ளது. தாமோதரன் சஞ்சிகை என்று குறிப்பிட்டார். இச் சஞ்சிகை ஆக்கத்தின் பெரும்பங்கு வேலைகள் கல்லூரியிலேயே மேற் கொள்ளப்படுவது குறித்துப் பாராட்டினார். சஞ்சிகை வெளியீட்டுரையை நிகழ்த்திய சிரேஷ்ட விரிவுரையாளர் திரு க.அருந்தாகரன் அவர்கள் தமது உரையிலே கல்லூரிச் சஞ்சிகை ஒன்று எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும், தாமோதரன் சஞ்சிகையின் சிறப்பான அம்சங்களையும், சஞ்சிகையில் செய்ய வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்வைத்தார். ஆசிரியர்களது ஆக்கங்கள் சிறப்புற அமைந்துள்ளமை பற்றிக் குறிப்பிட்டதுடன் ஆங்கிலப் பக்கத்தில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் தொடர்பான சிறப்பம்சங்கள் பற்றியும் பாராட்டினார். எதிர்காலத்தில் சிறந்த படைப்பாளர்களை உருவாக்கும் வகையில் கல்லூரிச் சஞ்சிகைகள் அமைய வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

தாமோதரன் சஞ்சிகை முதற்பிரதியை திரு ந.சிவபாலன் (உரிமையாளர், அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி) அவர்கள் பெற்றுக் கொண்டார். கோட்டக் கல்வி அலுவலர் அயற் கல்லூரி அதிபர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் நலன்விரும்பிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். திருமதி செ.செல்வராஜா (பிரதி அதிபர் உப அதிபர் திரு த.பாலசண்முகநாதன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

## க.பொ.த (சா/தர)ப் பரீட்சைப் பெறுபேறுகள் – 2011

கடந்த டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படை யில் எமது கல்லூரி மாணவர்கள் மூவர் எல்லாப் பாடங்களிலும் A தரச் சித்தி பெற்றுள்ளனர். எட்டு மாணவர்கள் 8A சித்தி பெற்றுள்ளனர். 5 மாணவர்கள் 7A சித்தியும் 21 மாணவர்கள் 6A, 5A சித்தியும் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும் போது எமது கல்லூரி சித்தி வீதம் அதிகரித்துள்ளதைக் காண முடிகின்றது.


### க.பொ.த (சா/தர)ப் பெறுபேற்று வீதம்

| பாடம் | வீதம் |
|---|---|
| சைவநெறி | 100 |
| கத்தோலிக்கம் | 100 |
| கிறிஸ்தவம் | 100 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 98.3 |
| ஆங்கிலம் | 68.97 |
| கணிதம் | 92.12 |
| வரலாறு | 90.15 |
| விஞ்ஞானம் | 84.24 |
| வர்த்தகம் | 90.82 |
| புவியியல் | 89.13 |
| குடியுரிமைக் கல்வி | 94.92 |
| சங்கீதம் | 100 |
| சித்திரம் | 87.50 |
| நடனம் | 100 |
| ஆங்கில இலக்கியம் | 80 |
| தமிழ் இலக்கிய நயம் | 95 |
| நாடகமும் அரங்கியலும் | 100 |
| தகவல் தொழில்நுட்பம் | 91.53 |
| விவசாயம் | 93.88 |
| மனைப்பொருளியல் | 100 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 96.63 |

எமது பாடசாலையின் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபெறுகளின் முழுமையை நோக்கும் போது 92% மான சித்தி வீதமே கிடைத்துள்ளது. எனவே A தரச் சித்தி வீதத்தை அதிகரிப்பதும், 100% மான சித்திவீதத்தைப் பெறுவதற்கான செயற்பாடுகளை அதிகரிப்பதும் மிகவும் அவசியமான தேவையாகவுள்ளது.

# G.C E O/L BEST RESULT 2011.

| | |
|---|---|
| Gnanasegaram Vithursan | 9A |
| Umamanniathasan Umasuthan | 9A |
| Premananthan Premisha | 9A |
| Sritharan Kreedi | 8AB |
| Ponnuththurai Kasro | 8AB |
| Balasubramaniam Ajeepan | 8AB |
| Srimurugathas Thulasigaran | 8AB |
| Ranganathan Araathana | 8AB |
| Thavarajah Senthalan | 8AC |
| Sripalan Sujeevan | 8AC |
| Sivagnamoorthy Anuraj | 8AC |
| Karaunakaran karan | 7ABC |
| Thirugnanasampar Arany | 7ABC |
| Suntharalingam Sukeniyah | 7ABC |
| Kathirgamanathan Niranjan | 7ABS |
| Poopalasingam Piriya | 7ABS |
| Nagendran Gothanya | 6A2BC |
| Navaratnam Sajiththa | 6A2BC |
| Thevathasan Sujeevan | 6A2B |
| Kumaravelrajah Kapilan | 6AB2C |
| Jeyaganeshan Jeyakeethan | 6AB2C |
| Balachandran Thamiliny | 6AB2C |
| Velauthapillai Thirusha | 6ABCS |
| Paramananthan Anoja | 6A2B |
| Kaugatharan kovarthanan | 5A3BC |
| Yogarasa Kabirththana | 5A3BC |
| Sivanantham Thayooraa | 5A3BC |
| Viththiyananthan Pakeesan | 5A3BS |
| Kamalanathan Mathusoothanan | 5A2B2C |
| Ganeshalingam sivanujan | 5A2B2C |
| Karthigasu Thirukkumaran | 5A2B2C |
| Thevarajah Tharanika | 5A2BC |
| Sivapirakasam Jeinothan | 5A2BCS |
| Balachandran Sajeejan | 5A 2BCS |
| Arutchelvan thipoojan | 5A 2B C |
| Sothilingam Kajani | 5A 2BCS |
| Mohanathasan Nitharsan | 5A3B |



ஞா.விதுசன் உ.உமாசுதன் பி.பிரேமிசா
ஸ்ரீ.கிரீடி பொ.கஸ்ரோ பா.அஜீபன்



ஸ்ரீ.துளசிகரன் ர.ஆராதனா த.செந்தாளன்
சி.சுஜீவன் சி.அனுராஜ் சு.சுகேனியா
க.கரன் தி.ஆரனி பூ.பிரியா
க.நிரஞ்சன் நா.கோதன்யா ந.சஜித்தா
கு.கபிலன் ஜெ.ஜெயகீதன் பா.தமிழினி
வே.திருஷா ப.அனோஜா தே.சுஜீவன்
க.கோவர்த்தனன் யோ.கபிர்த்தனா சி.தயூரா
வி.பாகீசன் க.மதுசூதனன் க.சிவனுஜன்



கா.திருக்குமரன்



தே.தரணிகா



சி.ஜெய்னோதன்



பா.சஜீஜன்



சோ.கஜானி




மோ. நிதர்சன்

**இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2012**



எமது கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி 17.02.2012 வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. கல்லூரி முதல்வர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக எமது கல்லூரிப் பழைய மாணவரும் யாழ் மேல்நீதிமன்றக் கணக்காளருமான திரு.கலைச்செல்வன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.





எமது முன்னாள் அதிபர் திரு இ.கயிலைநாதன் தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலர் திரு கு.சிவானந்தம். கணக்காளர் திரு சி.செந்தூரன் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் பழைய மாணவர் சங்கப் பிரதி நிதிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பபித்தமை குறிப்பிடத்தக்கது.

உடல், உள, ஆளுமை விருத்தியை நோக்காகக் கொண்டு இடம்பெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவர் ஊக்கத்துடன் பங்குபற்ற வேண்டும் எனவும் இக் கல்லூரியின் அபிவிருத்தியில் தான் மிக ஈடுபாடு கொண்டு கவனஞ் செலுத்துவதாகவும் பிரதமவிருந்தினர் அவர்கள் தமது உரையிலே குறிப்பிட்டுள்ளார். சிறப்பு விருந்தினர் அவர்கள் தமது உரையிலே மாணவர் விளையாட்டுப் போட்டியினூடாகவும், கல்வியினூடாகவும் ஒழுக்கம் பேணுபவர்களாக தம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.



மேலும் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் இவ்வருடம் 480 புள்ளிகளைப் பெற்று ஆனந்தா இல்லம் வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. ஏனைய இல்லங்களின் நிலைகள் பின்வருமாறு

முத்துக்குமாரு இல்லம் - 336 புள்ளிகள்

தாமோதரம் இல்லம் - 317 புள்ளிகள்


நேரு இல்லம் - 280 புள்ளிகள்

ஸ்ரீசுமங்கலா இல்லம் 267 புள்ளிகள்

அஞ்சலோட்டத்திற்கான வெற்றிக் கிண்ணத்தை 66 புள்ளிகளைப் பெற்ற ஆனந்தா இல்லமும், அணி நடையில் ஆண்கள் அணியில் முறையே ஆனந்தா, தாமோதரம், நேரு ஆகிய

இல்லங்கள் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டன. பெண்கள் அணியில் தாமோதரம், முத்துக்குமாரு, ஸ்ரீசுமங்கலா ஆகிய இல்லங்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்றன.

சிறந்த வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விபரம்





13 வயது

வினோஜன் (நேரு) எஸ்.ரக்சிகா (ஸ்ரீசுமங்கலா)

15 வயது

எஸ்.ஜனந்தன் (நேரு) மதுசிகா (முத்துக்குமாரு)

டினேசன் (ஆனந்தா) எஸ்.கஸ்தூரி (நேரு)

19 வயது

மதுஷன் (தாமோதரம்) தர்சிகா (ஆனந்தா)

கர்ஷன் (ஆனந்தா) ரெனிஸ்ரொக்சன் (தாமோதரம்)

இல்லங்களுக்கிடையே பெருவிளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

**சதுரங்கம்**

15 வயது ஆண்கள் - முத்துக்குமாரு இல்லம்

19 வயது ஆண்கள் - ஆனந்தா இல்லம்

15 வயது பெண் - நேரு இல்லம்

19 வயது பெண் - ஆனந்தா இல்லம்

**பூப்பந்து**

19 வயது ஆண் - நேரு

19 வயது பெண் - நேரு

**மேசைப்பந்து**

19 வயது ஆண் - முத்துக்குமாரு

19 வயது பெண் - ஸ்ரீசுமங்கலா

**கரம்**

15 வயது ஆண் - ஸ்ரீசுமங்கலா

19 வயது ஆண் - தாமோதரம்

15 வயது பெண் - ஆனந்தா

19 வயது பெண் - முத்துக்குமாரு

19 வயது ஆண் - ஸ்ரீசுமங்கலா

19 வயது பெண் - ஆனந்தா

**வலைப்பந்து**

15 வயது பெண் - ஸ்ரீசுமங்கலா

17 வயது பெண் - நேரு

19 வயது பெண் - ஆனந்தா

**கிரிக்கெட்**

19 வயது ஆண் - முத்துக்குமாரு

19 வயது பெண் - நேரு

**கபடி**

19 வயது ஆண் - தாமோதரம்

19 வயது பெண் - ஆனந்தா

**எல்லே**

19 வயது ஆண் - தாமோதரம்

19 வயது பெண் - தாமோதரம்

## வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி

வலய மட்டத்தில் வீர வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

நி.சங்கவி - 15 வயது பெண்

இ.அகல்யா - 19 வயது பெண்

கு. கலைமகள் - 19 வயது பெண்

வி.விதுர்சனா - 21 வயது பெண்

சகலதுறை வீராங்கனை - கு.கலைமகள் (19வய்து)

சாதனையாளர்

வி.வினோஜன் க.கபில்ராஜ்

க.விமோசன் அ.ஸ்ரெலின்றொக்சன்

க.மதுசன்

**பெருவிளையாட்டுக்கள்**

வலய மட்டத்தில் வெற்றி பெற்றோர் விபரம்

**கிரிக்கற்**

19 வயது ஆண் - 1ஆம் இடம்

19 வயது பெண் - 1ஆம் இடம்

**மேசைப்பந்து**

19 வயது ஆண் - 1ம் இடம்

19 வயது பெண் - 2ம் இடம்

**பட்மின்டன்**

15 வயது ஆண் - 1ஆம் இடம்

19 வயது ஆண் - 1ஆம் இடம்

15 வயது பெண் - 2ஆம் இடம்

19 வயது பெண் - 2ஆம் இடம்

**சதுரங்கம்**

15 வயது ஆண் - 2ஆம் இடம்

19 வயது ஆண் - 1ஆம் இடம்

15 வயது பெண் - 1ஆம் இடம்

19 வயது பெண் - 1ஆம் இடம்

**உதைபந்து**

15 வயது ஆண் - 1ஆம் இடம்

17 வயது ஆண் - 3ஆம் இடம்

19 வயது ஆண் - 3ஆம் இடம்

19 வயது பெண் - 1ஆம் இடம்

**வலைப்பந்து**

15 வயது பெண் - 3ஆம் இடம்

17 வயது பெண் - 2ஆம் இடம்

19 வயது பெண் - 1ஆம் இடம்

**கரப்பந்து**

15 வயது ஆண் - 1ஆம் இடம்

17 வயது ஆண் - 1ஆம் இடம்

19 வயது ஆண் - 2ஆம் இடம்

15 வயது பெண் - 3ஆம் இடம்

17 வயது பெண் - 3ஆம் இடம்

19 வயது பெண் - 3ஆம் இடம்

**எல்லே**

19 வயது ஆண் - 1ஆம் இடம்

19 வயது பெண் - 2ஆம் இடம்

**கபடி**

15 வயது ஆண் - 2ஆம் இடம்

19 வயது ஆண் - 1ஆம் இடம்

15 வயது பெண் - 3ஆம் இடம்

19 வயது பெண் - 1ஆம் இடம்

**ஏனைய போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம்**

**13 வயது ஆண்**

வி.வினோஜன் 100m - 1ஆம் இடம்

200m - 1ஆம் இடம்

நீளம் பாய்தல் - 2ம் இடம்

ர.கோபிகன் 200m - 3ஆம் இடம்

நீளம் பாய்தல் - 3ம் இடம்

4x100m அஞ்சலோட்டம் - 1ஆம் இடம்

**15 வயது ஆண்**

சி.கஜீபன் 100m - 3ஆம் இடம்

க.கோபிராஜ் - தடைதாண்டல் - 2ஆம் இடம்

ஜீ.கபில்ராஜ் - நீளம் பாய்தல் - 1ஆம் இடம்

சி.இளங்குமரன் - நீளம் பாய்தல் - 3ம் இடம்

- உயரம் பாய்தல் - 1ம் இடம்

சி.ஜனந்தன் - உயரம் பாய்தல் - 2ம் இடம்

ச.நிதுசன் - குண்டுபோடுதல் - 1ஆம் இடம்

- தட்டு எறிதல் - 2ம் இடம்

கே.லகுசாந் - ஈட்டி எறிதல் - 1ம் இடம்

வி.விதுஷன் - ஈட்டி எறிதல் - 3ம் இடம்

4x100m அஞ்சலோட்டம் - 1ம் இடம்

4x400m அஞ்சலோட்டம் - 1ம் இடம்

**17 வயது ஆண்**

க.விமோசன் - 200m - 2ஆம் இடம்

- 100m தடைதாண்டல் 1ம் இடம்

த.அஜீந்தன் - 400m - 1ஆம் இடம்

- 800m - 1ஆம் இடம்

- 1500m - 1ஆம் இடம்

ஆ.டயானன் - 1500m - 3ஆம் இடம்

பி.அன்பரசன் - 400m - 3ஆம் இடம்

ம.ஜீவன்ராஜ் - 100m தடைதாண்டல் - 2ம் இடம்

சி.டினேஷன் - முப்பாய்ச்சல் - 2ஆம் இடம்

உயரம் பாய்தல் 1ஆம் இடம்

த.தனஞ்செயன் - கோல் ஊன்றிப பாய்தல் - 2ஆம் இடம்

- ஈட்டி எறிதல் - 1ஆம் இடம்

குண்டு போடுதல் - 2ஆம் இடம்

நா.துர்க்காதரன் - குண்டு எறிதல் - 1ஆம் இடம்

4x100m அஞ்சலோட்டம் - 1ம் இடம்

4x400m அஞ்சலோட்டம் - 1ஆம் இடம்

### 19 வயது ஆண்

த.மதுசன் - 100m - 1ஆம் இடம்

நீளம் பாய்தல் - 1ஆம் இடம்

நா.பானுகோபன்- 200m - 1ஆம் இடம்

நீளம் பாய்தல் - 2ஆம் இடம்

சி.சுகிர்தன் - 400m - 1ஆம் இடம்

800m - 1ஆம் இடம்

தடைதாண்டல் - 2ஆம் இடம்

பு.சுலோஜன் 1500m - 2ஆம் இடம்

அ.ஸரெலின்ரொக்ஸசன் - தடைதாண்டல் - 1ஆம் இடம்

தட்டெறிதல் 1ஆம் இடம்

ஈட்டி எறிதல் 1ஆம் இடம்

ந.பிரதீபன் முப்பாய்ச்சல் - 2ஆம் இடம்

கு.மதுருபன் உயரம் பாய்தல் - 1ஆம் இடம்

கோல் ஊன்றிப்பாய்தல் - 2ஆம்இடம்

பி.சஜீலன் உயரம் பாய்தல் - 2ஆம் இடம்

க.திவாஜன் குண்டு போடுதல் - 1ஆம் இடம்

தட்டெறிதல் - 3ஆம் இடம்

4x100m அஞ்சலோட்டம் - 1ம் இடம்

4x400m அஞ்சலோட்டம் - 1ம் இடம்

### 21 வயது ஆண்

எஸ்.வேணுகானன் கோலுன்றிப்பாய்தல் 1ஆம் இடம்

ச.சஜீபன் தட்டெறிதல் 1ஆம் இடம்

### 13 வயது பெண்

எஸ்.ரக்சிகா நீளம் பாய்தல் 2ஆம் இடம்

உயரம் பாய்தல் 3ஆம் இடம்

ஆர்.துசாந்திகா நீளம் பாய்தல் 3ஆம் இடம்

### 15 வயது பெண்

என்.சங்கவி 100m 1ஆம் இடம்

நீளம் பாய்தல் 1ஆம் இடம்

வி.கிருஷா தடைதாண்டல் 1ஆம் இடம்

நீளம் பாய்தல் 3ஆம் இடம்

உயரம் பாய்தல் 2ஆம் இடம்

வி.விதுஷா உயரம் பாய்தல் 1ஆம் இடம்

ஆர்.அபிநயா உயரம் பாய்தல் 3ஆம் இடம்

ஜெ.மதுஷா குண்டு போடுதல் 2ஆம் இடம்

எச்.கம்ஷாலினி குண்டு போடுதல் 3ஆம் இடம்

### 17 வயது பெண்

பி.மதுசிகா 1500m 3ஆம் இடம்

பி.துவாரகா தடைதாண்டல் 2ஆம் இடம்

ரி.கௌசிகா தடைதாண்டல் 3ஆம் இடம்

கே.நேருகா முப்பாய்ச்சல் 2ஆம் இடம்

ஆர்.அகழ்யா 100m 1ஆம் இடம்

நீளம் பாய்தல் 2ஆம் இட்ம்

முப்பாய்ச்சல் 2ஆம் இடம்

எஸ்.கீரத்தனா 200m 2ஆம் இடம்

400m 2ஆம் இடம்

ஆர்.கஜிதா 800m 2ஆம் இடம்

எம்.கிருத்திதா 1500m 2ஆம் இடம்

கே.கலைமகள் தடைதாண்டல் 1ஆம் இடம்

நீளம் பாய்தல் 1ஆம் இடம்

முப்பாய்ச்சல் 1ஆம் இடம்

எஸ்.கிருஷ்ணவேணி தடைதாண்டல் 2ஆம் இடம்

வை.நிரஞ்சனா நீளம் பாய்தல் 1ஆம் இடம்

ஈட்டி எறிதல் 1ஆம் இடம்

ரி.எழிலரசி உயரம் பாய்தல் 2ஆம் இடம்

21 வயது பெண்

வி.விதுர்ஷனா 100m 3ஆம் இடம்

200m 1ஆம் இடம்

நீளம் பாய்தல் 2ஆம் இடம்

கே.உஷாயினி 400m 2ஆம் இடம்

ரி.கௌசிகா 1500m 3ஆம் இடம்

எல்.மயூரதி நீளம் பாய்தல் 3ஆம் இடம்

முப்பாய்ச்சல் 3ஆம் இடம்

வலய மட்ட அஞ்சலோட்ட வெற்றிக் கிண்ணத்தையும் எமது கல்லூரியே பெற்றுக் கொண்டது. 601 புள்ளிகளினால் வலயநிலையில் முதலிடம் பெற்றுக் கொண்டது.

இப்போட்டிகளில் பங்கேற்ற வீரர்களையும் வீராங்கனைகளையும் மேலும் உயர்வு பெற வாழ்த்துவதுடன் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

## தமிழ் மொழித்தினம் - 2012

இந்த ஆண்டிற்கான தமிழ் மொழித்தினப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் 06.03.2012 - 08.03.2012 வரை நடைபெற்று பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் 25 நிகழ்வுகள் வலய மட்டப் போட்டியில் பங்குபற்றின. வலய நிலையில் 25 நிகழ்வுகளில் 11 முதலாமிடங்களும் 04 இரண்டாம் இடங்களும், 04 மூன்றாம் இடங்களும் கிடைத்துள்ளன.

பாடசாலை மட்டப் போட்டி முடிவுகள்

பிரிவு II வாசிப்பு

ம.பானுகா 6D 1ம் இடம்

ம.கீதாஞ்சலி 6D 2ம் இடம்

தி.திவ்வியன் 3ம் இடம்

பாவோதல்

ம.பானுகா 6D 1ம் இடம்

ந.றஜீவா 7F 2ம் இடம்

த.தரணிகா 7D 2ம் இடம்

பேச்சு

செ.இளங்கதிர் 6B 1ம் இடம்

ம.கீதாஞ்சலி 6D 2ம் இடம்

த.தரணிகா 7D 3ம் இடம்

கட்டுரை

சி.டனுஜன் 7B 1ம் இடம்

ஜெ.பானுஜா 7E 2ம் இடம்

நி.சனாதனி 7D 3ம் இடம்

பிரிவு III பாவோதல்

ந.நிசாந்தன் 9B 1ம் இடம்

டே.கிருத்திகா 8D 2ம் இடம்

ச.சங்கர்ஜி 9B 3ம் இடம்

பேச்சு

யோ.மதுசியா 8E 1ம் இடம்

ச.சங்கர்ஜி 9B 2ம் இடம்

ந.நிசாந்தன் 9B 3ம் இடம்

கட்டுரை

சி.சோபனா 9D 1ம் இடம்

த.லதிசனா 8E 2ம் இடம்

ம.கீதானந் 9A 3ம் இடம்

பிரிவு IV பாவோதல்

மு.மதுராந்தகி 10F 1ம் இடம்

கு.மகிழினி 2ம் இடம்

இ.அர்ச்சனா 3ம் இடம்

பேச்சு

ச.மதுஷா 11D 1ம் இடம்

சி.கார்த்திகா 10E 2ம் இடம்

ம.தாரணி 11E 3ம் இடம்

கட்டுரை

ஆ.அஜித்தா 11E 1ம் இடம்

ம.விஜிகரன் 11A 2ம் இடம்

ப.ஷஜீபனா 11E 3ம் இடம்

இலக்கணம்

சி.கார்த்திகா 10E 1ம் இடம்

ச.மதுஷா 11D 2ம் இடம்

சி.டிலானி 11F 3ம் இடம்

கவிதை

தி.நவலாஜினி 11E 1ம் இடம்

து.யதுர்ஷன் 10B 2ம் இடம்

அ.அதுர்சனன் 11B 3ம் இடம்

சிறுகதை

பி.லக்ஷியா 11F 1ம் இடம்

த.பிரகாஷ் 11C 2ம் இடம்

கி.தர்மிகன் 11A 3ம் இடம்

குறுநாடகப் பிரதி

உ.பிரியங்கா 10E 1ம் இடம்

தி.சோபியா 10E 2ம் இடம்

மு.மதுராந்தகி 10F 3ம் இடம்

பிரிவு V பேச்சு

அ.லோஜனாஜக்குலின் 13A3 1ம் இடம்

ப.நிதுர்சன் 2ம் இடம்

ந.ஜசிந்தன் 3ம் இடம்

இலக்கணம்

அ.லோஜனாஜக்குலின் 13A3 1ம் இடம்

ம.பவதாரணி 13A3 2ம் இடம்

சி.சோபிதா 13A3 3ம் இடம்

தமிழறிவு வினா விடை (குழு)

சி.சோபிதா 13A3

க.நாககிருத்திகா 13A3

ம.பவதாரணி 13A3

இ.தஜிதா 13A4

ப.நிரோஜா 13A3

சிறுகதை

ஞா.தனிஸ்ரா 12A3 1ம் இடம்

ஆ.பானுஜா 12A4 2ம் இடம்

இ.கிருஷ்ணாகர் 13A1 3ம் இடம்

கவிதை

ப.நிதுர்சன் 12A3 1ம் இடம்

லோ.மயூரதி 2ம் இடம்

பா.அனித்தா 3ம் இடம்

இலக்கியத் திறனாய்வு

க.கிருத்திகா 13A2 1ம் இடம்

தமிழியற் கட்டுரை

ஆ.பானுஷா 12A4 1ம் இடம்

இ.தனிஸ்குமார் 2ம் இடம்

சி.தினேசிகா 3ம் இடம்

பிரிவு II இசை (தனி)

த.தரணிகா 7D 1ம் இடம்

வி.மிதுஷன் 7A 2ம் இடம்

பி.தனுஷ் 7A 3ம் இடம்

பிரிவு III இசை (தனி)

ந.கானப்பிரியா 8F 1ம் இடம்

டே.கிருத்திகா 8D 2ம் இடம்

வி.மதனிகா 9D 3ம் இடம்

பிரிவுIV இசை (தனி)

எ.சஜித்தா 11D 1ம் இடம்

ப.சஜீபனா 11E 2ம் இடம்

க.சண்பிகா 11D 3ம் இடம்

பிரிவு V இசை (தனி)

கி.அனுசா 1ம் இடம்

நி.சொருபினி 2ம் இடம்

ப.உ.சாளினி 3ம் இடம்

இசை (குழு I)

ந.கானப்பிரியா 8F டே.கிருத்திகா 8D

ஸ்ரீ.இந்துஜா 8D வி.மதனிகா 9D

ர.விகானி 9D கு.தக்சா 9E

த.ரஜித்தா நா.ஜனனி

க.பிரியங்கா த.தீபதா

இசை (குழு II)

கி.அனுகா நி.சொருபினி

ப.உ.சாளினி க.நளினி

சி.தேன்மொழி மு.லக்சியா

ஸ்ரீ.தினேசிகா ஏ.சஜிந்தா

ப.சஜீபனா ம.தவலோஜினி

பிரிவு II நடனம் (தனி)

சோ.நிவேதிகா 1ம் இடம்

இ.கேஷிகா 2ம் இடம்

ஹி.சகினா 3ம் இடம்

பிரிவு III நடனம் (தனி)

ஈ.வித்தகி 1ம் இடம்

நி.சங்கவி 2ம் இடம்

ந.சனோசா 3ம் இடம்

பிரிவுIV நடனம் (தனி)
சி.திருசாளினி 1ம் இடம்

இ.பபிலா 2ம் இடம்

கு.தீபிகா 3ம் இடம்

நாட்டிய நாடகம்

இ.தினேஸ்குமார் கு.தீபிகா

| | |
|---|---|
| நா.சங்கீர்த்தனா | ச.மதுஷா |
| மு.லவீனா | த.அபயவர்த்தனி |
| சி.கார்த்திகா | நி.சங்கீதா |
| சி.திருசாளினி | வி.நிதுஷா |
| இ.பமீலா | சோ.நிவேதிகா |

நடனம் (குழு I)

| | |
|---|---|
| நி.சங்கவி | சி.சோபனா |
| ஆ.சங்கவி | ச.நிலானி |
| அ.மதுஷா | த.றசீனா |
| ஈ.வித்தகி | கு.தரண்யா |
| இ.அபிநயா | வ.லிசாயினி |

வலய நிலையில் முதலிடம் பெற்றோர் விபரம்

பிரிவு IV இலக்கணம் - சி.கார்த்திகா

பிரிவு IV சிறுகதை - பி.லக்ஷியா

பிரிவு II பேச்சு - செ.இளங்கதிர்

பிரிவு II பாவோதல் - ம.பானுகா

பிரிவு III இசை (தனி) - ந.கானுப்பிரியா

பிரிவு IV இசை (தனி) - ஏ.சஜித்தா

பிரிவு III நடனம் (தனி) ஈ.வித்தகி

பிரிவு V நடனம் (தனி) லோ.மயூரதி

இசை - குழு II

நாட்டிய நாடகம்

தமிழறிவு வினாவிடை

பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களை மேலும் வெற்றிகள் பெற வாழ்த்துவதுடன் பயிற்றுவித்த ஆசிரி யர்களையும் பாராட்டுகின்றோம்.

**தமிழ் மொழித்தினம் மாவட்டப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்**





பேச்சு

செ.இளங்கதிர் -

1ஆம் இடம்

நடனம் பிரிவு III

ஈ.வித்தகி -

1ஆம் இடம்

நடனம் பிரிவு V

லோ.மயூரதி - 3ஆம் இடம்

பிரிவு IV இசை (தனி) ஏ.சஜித்தா - 3ஆம் இடம்

**ஆசிரியர்களுக்கான கோலப் போட்டி**

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கிடையே நடத்தப்பட்ட கோலப் போட்டியில் எமது கல:லூரி ஆசிரியை திருமதி.வித்தியா மகேந்திரன் முதலிடம் பெற்றுள்ளார்.

## பாராட்டுகின்றோம்



எமது கல்லூரி ஆசிரியை திருமதி க.ஸ்ரீதரன் அவர்கள் தமிழ் மொழிப்பாட ஆசிரிய ஆலோசக ராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். மேலும் உயர்வுகள் பெற்றுச் சிறப்படைய தடம் செய்தி ஏட்டினூடாக வாழ்த்துவதில் நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

## இந்தியப் பயணம்



எமது கல்லூரி மாணவன் தர்மராசா தர்ஷிகன் இந்தியத் தலைநகரான புதுடில்லிக்கு சுற்றுலாவொன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளார். வடமாகாண ஆளுநர் கௌரவ

ஜீ.ஏ.சந்திரசிறியின் ஏற்பாட்டில், இலங்கை இந்தியத் துணைத் தூதரகங்களின் நிதியுதவியுடன் வட மாகாண மாணவர்களுக்கென ஒழுங்கமைக்கப்பட்ட இச் சுற்றுலாவில் தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களின் பிரதிநிதியாக தர்ஷிகன் கலந்து கொண்டார். இதற்காக மாணவர்கள் நேர்முகத் தேர்வொன்றின் மூலமே தெரிவு செய்யப்பட்டனர். என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயணத்தின் மூலம் மாணவர் நிறைந்த அறிவு பூர்வமான அனுபவங்களைப் பெற்றுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் சிறப்பான முறையில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். தர்ஷிகனைப் போன்று ஏனைய மாணவர்களுக்கும் வாய்ப்புக்கள் தேடி வரவேண்டுமெனில் மாணவர்கள் கல்வி நிலையில் தம்மை மேலும் உயர்த்து வதற்கான வழிமுறைகளில் முனைந்து நின்று செயற்பட வேண்டும். தர்ஷிகன் மேலும் சிறப்புக்கள் பெற்று கல்வியில் உயர்வுகள் பெற தடம் செய்தியேட்டினூடாக வாழ்த்துகின்றோம்.

## காசநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு.



சாவகச்சேரி சுகாதார வைத்திய பணிமனையினரின் ஏற்பாட்டில் எமது கல்லூரியில் காசநோய் விழிப்புணர்வு தொடர்பான நிகழ்வொன்று கடந்த மார்ச் மாதம் இடம்பெற்றது. கல்லூரி அதிபரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விலபிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். வைத்திய கலாநிதி யமுனானந்தா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். காசநோய் விழிப்புணர்வு என்ற கருப்பொருளில் அமைந்த பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்வுகளும், இசைக் குழுவினரின் இசை நிகழ்வுகளும் இடம்பெற்றன. காலத்தின் தேவை கருதிய காசநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்காக சிறப்புற அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## சேவை நயப்பும் பிரிவுபசாரமும்



எமது கல்லூரியில் கற்பித்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான திரு செ.இளங்கோ, திரு மா.நேரு, திரு வர்ணகுலராஜா ஆகியோருக்கான பிரியாவிடை வைபவம். கடந்த மாசி மாதம் எமது கல்லூரியில் நடைபெற்றது. ஆசிரிய சகோதரத்துவத் தலைவர் செல்வி இ.நடராஜா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இவ்வாசிரியர்களின் அர்ப் பணிப்பான சேவை பற்றி அதிபர் அவர்களாலும், ஆசிரியர்களாலும் விதந்துரைக்கப்பட்டது. ஆசிரிய சகோதரத்துவத்தினரின் அன்பளிப்பும் வழங்கப்பட்டது. திரு செ.இளங்கோ ஆசிரியர் அவர்கள் எமது கல்லூரியில் உயிரியலையும், விஞ்ஞான பாடத்தையும் மிகவும் சிறப்பாகக் கற்பித்த ஆசிரியராவர். மாணவர்களின் நலன்கருதி சிரத்தையோடு தம்பணியைச் செய்தவர் மாணவர்களால் பெரிதும் விரும்பப்படும் சிறந்த ஆசிரியராக இங்கு பணியாற்றியவர். இவர் சென்ற இடத்திலும் சிறப்புறப் பணியாற்றி எல்லா நலன்களும் பெற்று வாழவேண்டுமென வாழத்துகின்றோம்.

திரு மா.நேரு ஆசிரியர் அவர்கள் குறுகிய காலம் எமது கல்லூரியில் தமிழ், வரலாறு முதலிய பாடங்களைக் கற்பித்த போதிலும் மாணவர் விரும்பும் ஆசிரியராக விளங்கியவர். எந்தப் பணியையும் சிறப்புறச் செய்பவராகவும், எல்லோருடனும் நட்புணர்வுடன் பழகுபவராகவும் விளங்கியவர். இடமாற்றம் பெற்றுச் சென்ற இடத்திலும் இவர் பணியிலே சிறந்தோங்க வேண்டுமெனவும் எல்லா நலன்களும் பெற்று வாழவும் வாழ்த்துகின்றோம்.

எமது கல்லூரியில் விஞ்ஞானபாடத்தையம், ஆங்கில பாடத்தையும் சிறப்பாகக் கற்பித்து ஆங்கில மொழி மூல இணைப்பாளராகவும் பணியாற்றியவர் திரு க.வர்ணகுலராஜா ஆசிரியர்

அவரகள் சுற்றாடல் முன்னோடிக் குழுவின் பொறுப்பாசிரியராகவும் சிறப்புறப் பணியாற்றியவர் மாணவர் நலனில் ஈடுபாடு கொண்டு சிறப்புறக் கற்பித்த ஆசிரியர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்ற போதிலும் அவர் சென்ற இடத்திலும் சிறப்புறப்பணியாற்றவும் உயர்வுகள் பெற்று எல்லா நலமும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

திருமதி ந.சிவராம் திருமதி ம.செல்வசுந்தரம்

திருமதி வி.ஶ்ரீரவிகுலன் திருமதி சி.மகாசிவம்

திருமதி க.பாலசுப்பிரமணியம் செல்வி ஜீ.தர்சிகா

திரு எஸ்.ரஞ்சித்குமார் திரு என்.நிதாகரன்

திருமதி ச.இராதாகிருஷ்ணன் திருமதி தா.துஷாந்

செல்வி.ஆர்.ரோமினா

எமது கல்லூரியில் சிறப்புறப் பணியாற்றிய இவ் ஆசிரியர்களின் சேவையைப் போற்றுவதுடன், சென்ற இடத்திலும் சிறப்புறப் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

## வரவேற்கின்றோம்

எமது கல்லூரியில் புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

திரு B பார்த்தீபன் BFA (Art)

திரு ப.சுபீகரன் BSc, PGDE

## பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம்

கடந்த 29.04.2012 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டம் நடைபெற்றது. மண்டபம் நிறைந்த பெற்றோர்களும், ஆசிரியர்களும் நலன்விரும்பிகளும் இக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர். கடந்த வருடத்திற்கான வரவு செலவு தொடர்பான பொருளாளரது அறிக்கையும், செயலாளரின் வருடாந்த அறிக்கையும் வாசிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. பாடசாலை அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகளும், கலந்துரையாடலும் இடம்பெற்றது. புதிய ஆண்டுக்கான நிர்வாக சபையும் அதிபர் அவர்களைத் தலைமையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டது.

### பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினர் விபரம்

தலைவர் திரு அ.கயிலாயபிளை (அதிபர்)

திரு ந.பாலச்சந்திரன் துணைத்தலைவர்

திரு கா.சிவஞானசுந்தரம் - செயலாளர்

திரு ம.குமாரவேல்ராஜா - துணைச்செயலாளர்

திரு பு.குகானந்தன் - பொருளாளர்

டாக்டர் த.குகதாசன் - பெற்றோர் பிரதிநிதி

திரு ஆ.தங்கவேலு - பெற்றோர் பிரதிநிதி

திரு து.கிருஸ்ணானந்தலிங்கம் - பெற்றோர்பிரதிநிதி

திருமதி ம.கருணராஜா - பெற்றோர் பிரதிநிதி

திருமதி ம.இராஜேந்திரா - பெற்றோர்பிரதிநிதி

திருமதி ல.முகுந்தன் - பெற்றோர் பிரதிநிதி

சிவஶ்ரீ.சி.கிருபாகரக்குருக்கள் - பெற்றோர்பிரதிநிதி

திரு ச.ஞானரதன் - ஆசிரியர் பிரதிநிதி

திரு ஒ.விஜயரட்ணம் - ஆசிரியர் பிரதிநிதி

திரு த.பாலசண்முகநாதன் - ஆசிரியர்பிரதிநிதி

திரு மு.வரதராஜன் - ஆசிரியர்பிரதிநிதி

திருமதி இ.சந்திரதேவன் - ஆசிரியர் பிரதிநிதி

திருமதி வி.மகேந்திரன் - ஆசரியர் பிரதிநிதி

பேராசிரியர் க.கந்தசாமி - நலன்விரும்பி

திரு இ.கயிலைநாதன் - நலன்விரும்பி

திரு செ.சபாரத்தினம் நலன்விரும்பி

திரு ம.தயாகுமரன் - கணக்காய்வாளர்

## கனவுக்கார் ஓவியப் போட்டி : 2011



ரொயாட்டே நிறுவனம் நடத்திய கனவுக்கார் ஓவியப் போட்டியில் தரம் 10 மாணவன் அர்த்தநாரீஸ்வரன் சோபிகன் அவர்களால் வரையப்பட்ட ஓவியம் உலகளாவிய ரீதியில் சிறந்த 135 ஓவியங்களுள் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான விருதுகளும் சான்றிதழ்களும் 10000/- பணப்பரிசும் கொழும்பில் அமைந்துள்ள Cinemen hotel இல் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அவருக்கு எமது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## கருவும் காட்சியும்

சித்திர பாட அடைவை மேம்படுத்தும் நோக்கடனும் சித்திரக் கலையில் மாணவர்க்கு ஈடுபாட்டை ஏற்படுத்தும் முகமாகவும் எமது கல்லூரிச் சித்திர ஆசிரியர்கள் சிறந்ததோர் போட்டி நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகஞ் செய்து நடத்தி வருகின்றனர். கருவும் காட்சியும் என்ற இந்த ஓவியப் போட்டித் தொடர் தரம் 6 - 13 வரையான மாணவர்க்குரியதாக நடைபெற்று வருகின்றது. இதற்கான சான்றி தழ்களும் வழங்கப்படுகின்றது. சித்திர பாடத் துறையினரின் இப்பணி பாராட்டப்பட வேண்டியதாகும். மாணவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் இப் போட்டிகளில் பங்குபற்றிச் சான்றிதழ்கள் பெற்று வருகின்றனர். இப்பாட மேம்பாட்டுத் திட்டத்தில் சிறப்புறப் பணியாற்றும் திரு ஆ.வைகுந்தன் ,திரு S.செல்வரமணன் ஆகிய சித்திரபாட ஆசிரியர் களையும் ஆர்வத்துடன் பங்குபற்றி வெற்றியீட்டும் மாணவர்களையும் தடம் செய்தி யேட்டினூடாகப் பாராட்டுகின்றோம்.

போட்டி இல - XI - 2012 - 01

பிரிவு I

1. க.ஜதுகுலன் - 1ம் இடம்
2. கு.ரிஷிகேசவன் - 2ம் இடம்
3. கு.லக்ஷன் - 3ம் இடம்

பிரிவு II

1. ம.கீதானந் - 1ம் இடம்
2. ஆ.சாருபன் - 2ம் இடம்
3. வி.மதுஷன் - 3ம் இடம்

பிரிவு III

1. அ.சோபிகன் 1ம் இடம்
2. கு.மகிழ்நன் - 2ம் இடம்
3. ஆ.கஜானந் - 3ம் இடம்

பிரிவு IV

1. ம.பிரசாந் - 1ம் இடம்
2. ம.ரஜீகா - 2ம் இடம்
3. யோ.இந்துஷன் - 3ம் இடம்

போட்டி இல - XII - 2012.02

பிரிவு I

1. செ.யதுர்ன்யன் - 1ம் இடம்
2. கு.ரிஷிகேசவன் - 2ம் இடம்
3. சி.பாகீதன் - 3ம் இடம்

பிரிவு II

1. பா.டிலக்ஷன் - 1ம் இடம்
2. ஆ.நிஜானந் - 2ம் இடம்
3. கி.கிருத்திகன் - 3ம் இடம்

பிரிவு III

1. சி.சிவஜன் - 1ம் இடம்
2. அ.சோபிகன் - 2ம் இடம்
3. ஆ.கஜானந் - 3ம் இடம்

பிரிவு IV

1. மோ.பிரசாந் 1ம் இடம்
2. பா.பபிராஜ் - 2ம் இடம்

## முதலாந் தவணைப் பரீட்சை - 2012

எமது கல்லூரி முதலாந்தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் எமது கல்லூரியில் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டு சிறப்பான முறையில் தரம் 6 - 11 வரையான வகுப்புகளுக்கான பரீட்சைகள் நடைபெற்றன. பரீட்சைகளைத் தொடர்ந்து 04.04.2012 அன்று பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் வகுப்பு ரீதியாக இடம்பெற்றது.

## தடம் வெளியீடு

கடந்த ஆண்டு இறுதித் தவணைக்கான தடம் செய்தியேடு 02.02.2012 அன்று தென்மராட்சிக் கல்வி வலயம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு இரவிச்சந்திரன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## பட்டிமண்டபம்



கம்பன் கழகத்தலைவர் கம்பவாருதி ஜெயராஜ் அவர்களை நடுவராகக் கொண்ட பட்டிமண்டபம் எமது கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு கல்லூரி முதல்வர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள்

தலைமையில் இடம்பெற்றது. திருக்குறளில் விஞ்சி நிற்பது அறமா, பொருளா, இன்பமா என்ற பொருளமைந்த பட்டிமண்டபத்தில் இந்தியாவில் இருந்து வருகை தந்த தமிழ் அறிஞர்களும் கலந்து சிறப்பத்தனர். மற்றும் கொழும்பு பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஸ்ரீபிரசாந்தன் அவர்களும், தென்மராட்சி இலக்கியச் சங்க அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்தனர். எக்காலத்திற்கும் பயன் தருகின்ற கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட பொய்யாமொழியாகிய திருக்குறள் பற்றிய பட்டிமண்டபம் நிகழ்வு காலத்தின் தேவைகருதியதாகவும், தமிழ் இலக்கியங்களைக் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தை இன்றைய இளஞ் சந்ததியினருக்கு ஏற்படுத்தும் ஒரு சிறந்த நிகழ்வாகவும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் பொதுக் கூட்டம்




கடந்த 01.04.2012 அன்று பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் பொதுக் கூட்டம் தலைவர் வி.ரி.நடராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக எமது கல்லூரி அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்தார். இக் கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது.


தலைவர் திரு எஸ்.சபாநாதன்

செயலாளர் திரு கே.சயந்தன்

பொருளாளர் திரு எஸ்.கேதீஸ்வரன்

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். எமது கல்லூரி அபிவிருத்தி தொடர்பான பல பயனுள்ள விடயங்கள் பற்றியும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் இவற்றை நடைமுறைப்படுத்தவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

## சாரணர்களுக்கான நூற்றாண்டு ஜம்போறி



இலங்கையில் சாரணர் இயக்கம் ஆரம்பித்து 100 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. இதனையொட்டி இலங்கை சாரணிய இயக்கம் ஆசிய - பசுபிக் 24 ஆவது ஜம்போறியை இலங்கையில் தம்புல்ல நகரில் நடத்தியது. ஆசிரிய நாடுகளினதும் பசுபிக் நாடுகளினதும் சாரணிய அமைப்புக்கள் இதில் பங்குபற்றின. எமது கல்லூரி சாரணர் அணியும் இந் நிகழ்வில் பங்குபற்றியது.

| | |
|---|---|
| ஸ்ரீ.கிறீடி | எஸ்.நிதர்சன் |
| எஸ்.திவாஜன் | கே.சுகிர்தன் |
| ம.சந்திரோதயன் | ஸ்ரீ.பிரியங்கன் |
| சி.சாருப்பிரியன் | வ.தனுஷன் |
| உ.சோகிதன் | ப.லதுசன் |
| தே.கோபிகன் | யோ.றக்சனன் |
| ச.நிதுஷன் | கோ.பவித்திரன் |

ஆகிய சாரணர்கள் இவ் அணியில் பங்கு கொண்டனர். திரு மு.அசோக்குமார், திரு சி.நவநீதன் ஆகிய சாரண பொறுப்பாசிரியர்கள் எமது கல்லூரி சாரணர் அணியினரை அழைத்துச் சென்றனர். 30.04.2012 - 06.04.2012 நடைபெற்ற இந் நிகழ்வில் மலையேறுதல், படகோட்டல், நீந்துதல், நீரின் தன்மை அளத்தல், வினாவிடைப் போட்டி, சீகிரியாவுக்குச் செல்லுதல், தம்புல்ல விகாரைக்குச் செல்லல், காட்டில் வனவியற் குறியீடுகளை பயன்படுத்திச் செல்லல். ஆகிய செயற்பாடுகளில் எமது கல்லூரி அணியினர் பங்குபற்றி சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர். சாரணர்

பணி மேலும் உயர்வு பெற்று சிறந்து விளங்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

## சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டி - 2012

பாடசாலை மட்டம்

தரம் 6:

இ.ஆருஷன் - 1ம் இடம் த.சாகித்தியன் - 2ம் இடம்

சி.அஜந்தன் - 2ம் இடம்

தரம் 7 :

சி.டனுஜன் - 1ஆம் இடம் அ.கீர்த்தனன் - 2ஆம் இடம்

ஜெ.பானுஜா - 3ஆம் இடம்

தரம் 8

ம.மதீசன் - 1ஆம் இடம் கு.கம்சிகா - 2ஆம் இடம்

வி.கஜானி - 3ஆம் இடம்

தரம் 9

இ.விஹானி - 1ஆம் இடம் த.யதுர்ஷா - 2ஆம் இடம்

வி.மதனிகா - 3ஆம் இடம்

தரம் 10

செ.சாரங்கன் - 1ஆம் இடம் க.சுஜீவிகா - 2ஆம் இடம்

து.யதுர்சன் - 3ஆம் இடம்

தரம் 11

கு.மயூரன் - 1ஆம் இடம் பி.லக்ஷிகா - 2ஆம் இடம்

த.கிரிசாந் - 2ஆம் இடம்

தரம் 12, 13

செ.தர்மிகா - 1ஆம் இடம் கு.திபீகா - 2ஆம் இடம்

து.வின்ஷன் - 3ஆம் இடம்

இவர்களைப் பாராட்டுகின்றோம்.

## English in Progress

The G.C.E (O/L) results for 2011 is appreciable. The pass percentage of the students is 68.97. Twenty eight students got 'A' grade, ten students got 'B' Grade and forty students got 'C' grade. Out of two hundred and three students one hundred and forty students have passed. At the same time the results for English Literature is 80%. Twenty students have passed out of twenty five students in English Literature. In order to increase the pass percentage we have organized a Special Project for the G.C.E (O/L) classes from second term.

## Welcome our New English Teacher



We are glad to welcome our new English teacher Mrs. V.Balachandran to our English stream. She is very enthusiastic and her services will be very valuable.

## English Activity room

A new light was created for the English Department and the students. An activity room for English was declared opened by our Honorable Principal Mr.A Kailayapillai on 10th February 2012



at 9 a.m. The teachers of English, sectional heads and one student from each class was attended to this occasion. Our Principal delivered a speech on the benefits and the importance of English Activity room for the students and the school. Now the activity room is fully occupied through out the periods and the students are benefitted by it.

## English Day Competition 2012

English Day competition – 2012 will be conducted during the second term. We have received the circular for the competition from the Thenmaradchi Zonal Education Department. The school level competitions will be conducted during the second term. For the school level competition three students will be selected from each division. This year the new item news reading for grade 12 & 13 classes is added. The Zonal level English day Competition will be conducted in June.

# எமது நோக்கு



ஒரு சமூகம் உயிர்ப்புடன் திகழ்வதற்கு ஆசிரியர்களின் பங்களிப்பு அளப்பரியது. சமூகத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஆசிரியரின் நேர் நடத்தைகளும், எதிர் நடத்தைகளும் காரணங்களாக அமைந்துவிடுவதுண்டு. எனவே ஆசிரியரின் முக்கியத்துவத்தையும், ஆசிரியத்துவத்தின் மேன்மையினையும் நன்கு உணர்ந்து செயற்படுதல் அவசியமாகின்றது. ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவோர் அதன் புனிதத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். அதற்கேற்ப தமது நடத்தைகளைச் சீராக்கிக் கொள்ளல் வேண்டும். மாணவர்க்கு முன்மாதிரியானவர்களாகத் திகழ வேண்டியது மிகவும் அவசியமானதாகும். தொடர்ந்து கற்பவரே ஆசிரியத் தொழிலுக்குப் பொருத்தமானவர். ஆசிரியர்கள் தொடர்ந்து கற்பதன் மூலம் ஆழமான அறிவையும், விசேட திறன்களையும், பொருத்தமான விழுமியங்களையும் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். இவ்வாறான ஆசிரியராலேயே நவீன மாற்றங்களை அறிந்து அதற்கேற்ற முறையிலே கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டைத் திட்டமிடக் கூடியதாக இருக்கும்.

முற்காலத்திலே ஆசிரியர் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வகையிலே உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட்ட உயர்வான நிலையைத் தொடர்ந்தும் பேண வேண்டும். ஒழுக்கச் சீர்கேடுகளையிட்டு வேதனைப்பட்டுக் கூறிக் கொண்டிருப்பதால் எவ்வித பயனுமில்லை. சொல்லும் செயலும் ஒன்றாய் இணைந்து சமூகத்தைச் சீர்திருத்தி சிறந்த தரமான கல்வியை வழங்குவதில் முனைப்புக் கொண்டு செயற்பட வேண்டியதே இன்றைய ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் முக்கியமான பணியாகும்.

## வெளியீட்டுக்குழு

♦ வெளியீட்டாளர்:

திரு அ.கயிலாயபிள்ளை.(அதிபர்)
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)



ஆலோசனை:



திரு ந. பாலச்சந்திரன்
பிரதி அதிபர்



திருமதி செ.செல்வராஜா
பிரதி அதிபர்



திரு.த.பாலசண்முகநாதன்
உப அதிபர்

பிரதம ஆசிரியர் :

திரு க.முத்துலிங்கம்



♦ ஆசிரியர் :



திருமதி வி.மகேந்திரன்
(தமிழ்)



திருமதி தே.கமலேஸ்வரன்
(ஆங்கிலம்)

♦ கணனி வடிவமைப்பு.

திரு. ஆ.வைகுந்தன்



♦ கணனிப்பதிவு:

திருமதி க.நளாயினி



அனுசரணை: ஆசிரிய சகோதரத்துவம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

NEWS LETTER

Web.WWW.ChC.sch.lk

Email.chavahindu@gmail.com

FROM , PRINCIPAL,
J/CHAVAKACHCHERI
HINDU COLLEGE
CHAVAKACHCHERI
T.P 0213215189
T.P.No:021 2270350/ 021 2270351

TO, ..............................................
..............................................
..............................................
..............................................